

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.5.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், ரொக்கையா மாலிக் (எ) கவிஞர் சல்மா ஆகியோர் சந்தித்து, மாநிலங்களவை உறுப்பினருக்கான தேர்தலில் வேட்பாளராக அறிவித்ததற்காக நன்றி தெரிவித்து, வாழ்த்துப் பெற்றனர். உடன், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், கழக அமைப்புச் செயலாளர். ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.

### கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 'மக்களுடன் முதல்வர்' மூன்றாம் கட்ட சிறப்பு முகாமில்

# 1,498 பயனாளிகளுக்கு ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்

உளுந்தூர்பேட்டை,மே 30-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம், மதியனூர் ஊராட்சி, ஆண்டிக்குழி ஊராட்சி, திருநாவலூர் ஊராட்சி, சேந்தமங்கலம் ஊராட்சி மற்றும் பாதூர் ஊராட்சி ஆகிய இடங்களில் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் நேற்று முன்தினம் (28.05.2025) தொடங்கி வைத்தார்.

இம்முகாமில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.ெஜ.மணிக்கண்ணன், தா.உதய சூரியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதன் பின்னர் இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பொது மக்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களின் மனம் அறிந்து, மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக தொடங்கப்பட்ட அரசுத் திட்டங்களை செயல்படுத்தும், அரசு அலுவலர்களை மக்களிடம் நேரடியாகக் கொண்டு சென்று மனுக்களைப் பெறும் உன்னதமானத் திட்டம் தான் மக்களுடன் முதல்வர் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் பொது மக்களிடமிருந்து மனுக்களை பெறுவதோடு மட்டுமல்லாமல் அந்த மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என்பதற்காக மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் பொது மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்ற 30 நாட்களுக்குள் அரசின் முக்கிய சேவைகளை அவர்களின் இல்லத்திற்கு அருகே வழங்கும் நோக்கத்துடன் மக்களுடன் முதல்வர் திட்டம் துவங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மக்களுடன் முதல்வர் திட்டம் முகாமில் வருவாய் துறை, வேளாண்மைத் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, தொழிலாளர் நலத்துறை, ஊரக வளர்ச்சித் துறை உள்ளிட்ட 15 அரசு துறைகள் மூலம் பொதுமக்களுக்கு சேவைகள் வழங்கப்படுகிறது.

பொதுமக்கள் வீட்டு மனைப் பட்டா, முதியோர் உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு மனுக்களை இம்முகாமில் அளித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்துத் துறை அலுவலர்களும் இம்முகாமில் இருக்கிறார்கள். உங்கள் கோரிக்கை மனுக்களை அந்தந்த துறை அலுவலர்களிடம் வழங்கி பயன் பெற வேண்டும்.

ஆதிதிராவிடர் நலத் துறையின் சார்பில் மாணவர்களின் உயர்கல்வி படிப்பிற்காக கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. வெளிநாட்டிற்கு சென்று படிக்க கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தொழிலாளர் நலத்துறையின் சார்பில் விபத்து மரணத்திற்கு வழங்கப்பட்ட நிவாரண உதவித் தொகை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.8 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட உள்ளது.

எனவே இதுபோன்று அனைத்து திட்டங்களையும் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் பொதுமக்கள் அனைவரும் அந்தந்த துறை அலுவலர்களிடம் மனு அளித்து மனுவிற்கான ரசீதினை பெற்று பயன்பெற வேண்டும் என தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்தார்.

தொடர்ந்து மக்களுடன் முதல்வர் முகாமில் பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டு, மதியனூர் ஊராட்சியில் 496 பயனாளிகளுக்கு ரூ.61.15 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆண்டிக்குழி ஊராட்சி, களத்தூர் கிராமத்தில் 203 பயனாளிகளுக்கு ரூ.18.56 இலட்சம் மதிப்பீட்டிலும், திரு நாவலூர் ஊராட்சியில் 340 பயனாளிகளுக்கு ரூ.25.08 இலட்சம் மதிப்பீட்டிலும், சேந்தமங்கலம் ஊராட்சி, மாரனோடை கிராமத்தில் 266 பயனாளிகளுக்கு ரூ.26.81 இலட்சம் மதிப்பீட்டிலும், பாதூர் ஊராட்சி, சின்னக்குப்பம் கிராமத்தில் 193 பயனாளிகளுக்கு ரூ.29.26 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் 1,498 பயனாளிகளுக்கு ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ஜீவா, திருக்கோவிலூர் உதவி ஆட்சியர் ஆனந்த் குமார் சிங், திருநாவலூர் ஒன்றியக்குழுத் தலைவர் இ.சாந்தி இளங்கோவன், ஒன்றியக்குழு துணைத் தலைவர் ஜெ.ராமலிங்கம், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர், திருநாவலூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜி.ஆர்.வசந்தவேல், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கி.ரமேஷ்குமார், வேளாண் இணை இயக்குநர் வே.சத்யமூர்த்தி, கூட்டுறவுத் துறை இணைப்பதிவாளர் சி.பெ. முருகேசன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) சுமதி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் க.கீதா, வட்டாட்சியர் அனந்தகிருஷ்ணன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



**21-ம் ஆண்டு நினைவு அஞ்சலி**



திருமதி. **கமலா அரங்கநாதன்**
நினைவு தினம் 16–05–2004

திரு. **மு. அரங்கநாதன்** Ex. M.L.A.
நினைவு தினம் 30–05–2004

என்றும் உங்கள் ஆசீர்வாதத்துடன்
**The Graphic Design Shop & Cuckoo Garden** Mahabalipuram
அலுவலக ஊழியர்கள்,
சென்னை – 14 Mob: +91 94440 74706

கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூரில் ரூ.8.50.கோடி மதிப்பீட்டில் புதிய தொழிற் பயிற்சி நிலையம் கட்டிடம் கட்டுவதற்கு தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் அடிக்கல் நாட்டினார்.

### அமைச்சர் கே.என்.நேரு வழங்குகிறார்!

# அம்பா சமுத்திரத்தில் பட்டா மற்றும் நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள்!

நெல்லை, மே 30 -

நெல்லை கிழக்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் தீர்த்தபதி கலைக் கல்லூரி மைதானத்தில் இன்று (30.05.2025 வெள்ளிக் கிழமை)காலை 9 மணி அளவில் பட்டா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் அரசு நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர், நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று பட்டாக்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி விழா பேருரையாற்றுகிறார்.கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக பங்கேற்பீர் என நெல்லை



கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:

நாளும் பல நல்ல திட்டங்களை வழங்கி வருகின்ற திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்களுடைய நல்லாட்சியில்,திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பொதுமக்கள், எண்ணற்ற பல நல்ல திட்டங்களை பெற்று மகிழ்ந்து வருகிறார்கள்.

அந்த நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியாக இன்று (30.05.2025 - வெள்ளிக்கிழமை) காலை 9 மணி அளவில் அம்பாசமுத்திரம் தீர்த்தபதி கலைக்கல்லூரி மைதானத்தில் வைத்து பொதுமக்களுக்கு இலவச பட்டாக்களை வழங்கி, நலத்திட்ட உதவிகளை வழங்கும் மாபெரும் அரசு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர்,நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று சிறப்புரை ஆற்றுகிறார்.

சிறப்புமிக்க இந்நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், மாநில மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பொது மக்கள் திரளாக பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பிக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### அண்ணாகிராமம் என்.பலராமன் சகோதரி!

# எஸ்.தமிழரசி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



கடலூர் மே.30 -

கடலூர் மேற்கு மாவட்டம் அண்ணாகிராமம் முன்னாள் ஒன்றிய செயலாளர் தலைமை பொதுக்குழு உறுப்பினர் முரசொலி முகவர் என்.பலராமன், எழுமேடு கிளைக் கழக நிர்வாகிகள் என்.ராஜி, என். ராமு ஆகியோரின் சகோதரியும், பண்ருட்டி திருவதிகை மு.செல்வமணியின் மனைவியுமான எஸ்.தமிழரசி நேற்று 29.05.2025 வியாழக் கிழமை நள்ளிரவு 12:05. மணியளவில் உடல் நலக் குறைவினால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் கழகத்தினர் மற்றும் உறவினர்கள் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அம்மையாருக்கு எஸ். மாறன் சிந்து, எஸ். கதிரவன் சௌந்தர்யா என்ற மகன்களும் மருமகள்களும், சுபாஷினிசேகர் என்ற மகளும் மருமகனும் உள்ளனர்.

அம்மையாரின் இறுதி ஊர்வலம் நேற்று 29.05.2025 மாலை 4 மணி அளவில் பண்ருட்டி திருவதிகை அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு திருவதிகை கெடிலம் ஆற்றங்கரையில் நல்லடக்கம் செய்யப் பட்டது.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

மதுரை மாநகர் மாவட்டம், 57வது வார்டைச் சேர்ந்த பொன்வசந்த் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 28.5.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்

# முன்சிறை கிழக்கு, கிள்ளியூர் வடக்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் மாற்றியமைப்பு!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கழகத் தலைவர்** அவர்கள் அமைத்த "தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு" ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கன்னியாகுமரி மேற்கு மாவட்டத்தில் முன்சிறை கிழக்கு ஒன்றியத்தில் உள்ள **விளாத்துறை ஊராட்சி** கிள்ளியூர் வடக்கு ஒன்றியத்துடன் இணைக்கப்படுகிறது. முன்சிறை கிழக்கு ஒன்றியம் மீதமுள்ள 5 ஊராட்சிகளைக் கொண்டு தொடர்ந்து செயல்படும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 28.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வடகாடு த. நல்லதம்பி
### மே 30 (2014)



தமது இளம் வயதிலேயே திராவிட இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு,நாடக மன்றம் ஒன்றினை தானே துவக்கி, அதில் தானும் நடித்து அப்பகுதி முழுவதும் திராவிடக் கொள்கைகளை பரப்பினார். கழகம் துவங்கிய பின்னர் அதில் இணைந்து பணியாற்றினார்.

அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணி இயக்கத்தில் ஆலங்குடி பகுதி தலைவர் – திருவரங்குளம் ஒன்றியச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட விவசாய அணிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.


புதுக்கோட்டை நிலவள வங்கி தலைவராகவும், இயக்குநராகவும் – மாவட்ட அரசு மருத்துவமனை ஆலோசனை உறுப்பினராக பதவி வகித்தவர்.

1962 விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் – 1964 இந்தி எதிர்ப்பு சட்ட எரிப்பு போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் – 1986 சட்டநகல் எரிப்பு போராட்டம் ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறைத் தண்டனை பெற்றதோடு நெருக்கடி நிலை மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாகை அ. அம்பலவாணன்
### மே 30 (2020)



கழகம் துவக்கப்பட்ட 1949 ஆம் ஆண்டே முத்தமிழறிஞர் கலைஞரை அழைத்து, நாகை, ஆழியூரில் பொதுக்கூட்டம் நடத்தியவர். 1961–ல் சிக்கலில் கிளைக் கழகத்தை இவர் உருவாக்கியபோது, பேரறிஞர் அண்ணா அவர்களே நேரடியாக கிளை அலுவலகம் வந்து, கிளை குறிப்பேட்டில் கையொப்பமிட்டு சென்றார்.

கீழத் தஞ்சை மாவட்டச் செயலாளர், நாகை மாவட்டச் செயலாளர் என பல்வேறு கழகப் பொறுப்புகளை வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரது அன்பையும் நன்மதிப்பையும் பெற்றவர்.

தஞ்சை மாவட்ட வேளாண் விற்பனைக்குழு தலைவராக பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

2017ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில் 'பாவேந்தர் பாரதிதாசன் விருது' வழங்கப்பட்டது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**